Lille By CHALLANI

# மாலை எக்ஸ்பிரஸ்

MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!
விசுவாவசு வருடம் சித்திரை 24
ஹிஜ்ரி 1446 துல்கதா 8
Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com
/maalaiexpressnews
● புதுச்சேரி ● புதன்கிழமை, மே 7, 2025 ● வெளியீடு: 8-5-2025, வியாழக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 291 ● 8 பக்கம் ● ரூ.6

Fedha By CHALLANI

## அண்ணா, கருணாநிதி நினைவிடங்களில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை



**சென்னை, மே 7-**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு 4 ஆண்டுகள் இன்றுடன் நிறைவு செய்து ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. இதையொட்டி தி.மு.க. அரசின் 4 ஆண்டு சாதனையை மக்களிடம் கொண்டு சேர்க்க தி.மு.க. தொண்டர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று அறிவுறுத்தி இருந்தார்.

இந்த நிலையில், முதலமைச்சராக 5ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மெரினாவில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, கருணாநிதி நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

முதலமைச்சருடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

## ‘ஆபரேஷன் சிந்தூர்’

# பயங்கரவாத முகாம்கள் மீது இந்திய ராணுவம் தாக்குதல்

**வீடியோ வெளியீடு**



**புதுடெல்லி, மே 7-**

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக இந்திய ராணுவத்தால் ‘ஆபரேஷன் சிந்தூர்’ தொடங்கப்பட்டது. பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் பயங்கரவாதிகளின் முகாம்கள் மீது இன்று அதிகாலை இந்திய பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தினர். பஹவல்பூர் முதல் கோட்லி வரை 9 பயங்கரவாத முகாம்கள் குறிவைக்கப்பட்டன.

முப்படைகள் கூட்டாக இணைந்து நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்று முதற்கட்ட தகவல் வெளியாகி உள்ளது. இந்நிலையில் இந்த தாக்குதல் குறித்த செய்தியாளர் சந்திப்பில் கர்னல் சோபியா குரேஷி, விங் கமாண்டர் வியோமிகா சிங் ஆகியோர் ஆபரேஷன் சிந்தூர் எப்படி நடத்தப்பட்டது என்று விளக்கினர். எந்தெந்த பயங்கரவாத முகாம்களில் எந்தெந்த பயங்கரவாதிகள் குறிவைக்கப்பட்டனர் என்று அவர்கள் விரிவாக எடுத்துக்கூறினர்.

சோபியா குரேஷி பேசுகையில், பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக ஆபரேஷன் சிந்தூர் தொடங்கப்பட்டது. இரவு 1.05 முதல் 1.30 வரை ஆபரேஷன் சிந்தூர் மேற்கொள்ளப்பட்டது. ஆபரேஷன் சிந்தூர் மூலம் 9 இடங்கள் தாக்கப்பட்டன. நாங்கள் சாதாரண குடிமக்களுக்கு தீங்கு விளைவிக்கவில்லை. பயங்கரவாதத் தாக்குதலில் சதித்திட்டம் தீட்டியவர்கள் குறிவைக்கப்பட்டனர். பயங்கரவாதிகளின் முதுகெலும்பை உடைக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்கிறார். தாக்குதல் தாக்குதல் தொடர்பான வீடியோவும் இந்த சந்திப்பில் வெளியிடப்பட்டது.







## சேலம் விநாயகா மிஷின் விம்ஸ் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில் விவாத போட்டி




சேலம், மே 7-

சேலம் விநாயகா மிஷின் விம்ஸ் வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில் மாணவர்களின் திறனை வெளிக்கொணரும் வகையில் பல்வேறு போட்டி நிகழ்வுகள் நடந்தது.

விநாயகா மிஷனின் விம்ஸ் வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் சார்பில் மாணவர்களின் பல்வேறு திறன்களை வெளிக்கொணரும் வகையிலும் அவர்களின் மென் திறனை மேம்படுத்தும் வகையிலும் பல்வேறு போட்டி நிகழ்வுகள் இரண்டு நாட்களாக சேலம் confido அமைப்பின் மூலம் கல்லூரியின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் வழிகாட்டுதலின்படி நடத்தப்பட்டது. இரண்டு நாட்களாக நடத்தப்பட்ட இப்போட்டி நிகழ்வுகளில் மாணவர்களுக்கான விவாத போட்டி, குழு பாடல், வர்ணனை, குழு கட்டமைத்தல் சார்ந்த பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் கல்லூரியின் பல்வேறு பிரிவுகளை சார்ந்த முதலாம் ஆண்டு மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்று தங்களின் தனித்திறமையினையும் குழு ஒருங்கிணைப்பினையும் வெளிப்படுத்தினர்.

மேலும் இப்போட்டிகளின் நிறைவு விழாவானது கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது. விழாவில் கான்ஃபிடோ அமைப்பின் நிறுவனர் சரவண பெருமாள் வரவேற்புரை வழங்கினார் .கல்லூரியின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் முன்னிலை வகித்து தலைமையுரையாற்றி பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழினையும், பதக்கங்களையும் வழங்கினார். முடிவில் காண்பிடோ அமைப்பின் இயக்குனர் மதுமிதா நன்றியுரை வழங்கினார்.

இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் கல்லூரியின் பேராசிரியர்கள் தமிழ் சுடர் மற்றும் கலைவாணி ஆகியோர் செய்திருந்தனர்.

## குழந்தைகளை அரசு பள்ளியில் சேர்க்க வேண்டி பேரணி



ராமநாதபுரம், மே 7-

ராமநாதபுரம் அடுத்த என் மனம் கொண்டான் ஊராட்சி உச்சிப்புளியில் அனைத்து குழந்தைகளையும் அரசு பள்ளி மற்றும் அங்கன்வாடியில் சேர்ப்பதற்கு உண்டான கருத்தரங்கம் நடைபெற்றது. மண்டபம் ஒன்றிய வட்டார வளமைய மேற்பார்வையாளர் வனிதா, கருத்தரங்கத்தில் கலந்து கொண்ட பெண்களிடையே குழந்தைகளை அரசு பள்ளியில் சேர்க்க வேண்டியும், மூன்று, ஐந்து வயது நிறைவு பெற்ற அனைத்து குழந்தைகளையும் அங்கன்வாடியில் சேர்க்க வேண்டியும், அக்குழந்தைகளின் தொடர் கல்வியை உறுதி செய்யும் வகையிலும், வாழ்க்கை திறன் கல்வி மற்றும் தனித்திறன் மேம்படும் வகையிலும், கலந்து கொண்டவர்களிடையே எடுத்துரைத்தார. ரூரல் வொர்க்கர்ஸ் டெவலப்மென்ட் சொசைட்டி (. ஆர்.டபிள்யூ டி எஸ்) இயக்குனர் சாத்தையா தலைமை தாங்கினார். ஒருங்கிணைப்பாளர் கனகவல்லி, ஆவண தொகுப்பாளர் மற்றும் எம்ஐஎஸ் ஆபிஸர் ராஜாமணி ,கணக்காளர் நிர்மலா, வட்டார ஒருங்கிணைப்பாளர் ராஜாத்தி மற்றும் காமாட்சி ஆகியோர் முன்னிலையில் உச்சிப்புளி துத்திவலசையில் இருந்து குழந்தைகளின் உரிமைகளை காப்போம். இடைநின்ற குழந்தைகளை இன்றே பள்ளிக்கு அனுப்பவும், 100 சதவீதம் அரசு பள்ளி செல்லும் கிராமமாக மாற்றி விடுவோம், பெண்கல்வியை நாட்டின் வளர்ச்சி, ஐந்து வயது நிறைவு பெற்ற அனைத்து குழந்தைகளையும் அரசு பள்ளியில் சேர்ப்போம் போன்ற பதாகைய்களை ஏந்தி பேரணியை துவக்கினார்.

பேரணியில், சேர்ப்போம் சேர்ப்போம் ஐந்து வயது நிறைவு பெற்ற அனைத்து குழந்தைகளையும் அரசு பள்ளியில் சேர்ப்போம். சேர்ப்போம் சேர்ப்போம் மூன்று, ஐந்து வயது நிறைவு பெற்ற அனைத்து குழந்தைகளும் அங்கன்வாடி சேர்ப்போம் போன்ற கோஷங்களை முழக்கி பெண்கள் கலந்துகொண்டனர். இப்பேரணி உச்சிப்புளி, முருகானந்தபுரம், என் மனம் கொண்டான் வழியாக பேருந்து நிலையம் சென்று நிறைவடைந்தது. மேலும் இப்பேரணியில் கும்பரம் கோரவல்லி, வெள்ளரி ஓடை, நந்தகுளம், சின்ன ரெட்டை ஊரணி, கேபிகேவலசை, அம்மாபட்டினம், கடுக்காய் வலசை, புதுவலசை, குயவண்ணங்குடி, சமயங் வலசை, அலகாத்தவலசை கிராமங்களில் இருந்து ஏராளமான பெண்கள் கலந்துகொண்டனர்.

# தலையங்கம்

மாலை எக்ஸ்பிரஸ்

7.5.2025 (புதன்கிழமை)

## கெடுபிடிகள் தேவையா?

இந்த ஆண்டு நாடு முழுவதும் 20 லட்சத்து 80 ஆயிரம் பேரும், தமிழ்நாட்டில் 1.5 லட்சம் பேரும் நீட் தேர்வு எழுதினார்கள். தேர்வை முறையாக நடத்தவேண்டும் என்பதிலோ, எந்தவித முறைகேடும் நடக்கக்கூடாது, திறமையுள்ளவர்கள் மட்டும் வெற்றி பெறவேண்டும் என்றவகையில் தேர்வு மையத்தில் யாரும் காப்பி அடிக்கக்கூடாது என்பதிலோ எந்த மாற்றுக்கருத்துக்கும் இடம் இல்லை. ஆனால் கட்டுப்பாடு, சோதனை என்ற பெயரில் மாணவமாணவிகளை வாட்டி வதைப்பதை எந்த காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளவே முடியாது. ஒவ்வொரு நீட் தேர்வின்போதும் இந்த எதிர்ப்பு குரல்கள் ஓங்கி ஒலித்தாலும் அடுத்த ஆண்டு முந்தைய ஆண்டைவிட அதிகமாகவே சோதனை என்ற பெயரில் மாணவமாணவிகள் துன்புறுத்தப்படுகிறார்கள்.

ஆடை கட்டுப்பாடு பற்றி ஹால் டிக்கெட்டில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றாலும் முழுக்கை சட்டை அணியக்கூடாது, பட்டன்கள் இருக்கக்கூடாது, அரைக்கை டீசர்ட்டுதான் அணியவேண்டும், ‘பெல்ட்’ அணியக்கூடாது, ஷூ போடக்கூடாது என்று மாணவர்களுக்கு கட்டுப்பாடுகள் இருந்தன. இதைவிட கொடுமை என்னவென்றால் மங்களகரமாக இருக்கவேண்டிய பெண்களின் கூந்தலை அவிழ்த்துவிட்டு தலைவிரி கோலமாக செல்லவேண்டும், பொட்டு வைக்கக்கூடாது, கம்மல், மூக்குத்தி, கொலுசு, ஏன் செயினும் அணியக்கூடாது என்று மாணவிகளை அலங்கோலமாக்கிவிட்டே தேர்வு மையத்துக்கு அனுப்பினார்கள். திருவாரூரில் திருமணம் முடிந்து சில நாட்களே ஆன பெண் தேர்வு மையத்துக்கு வந்தபோது அவருடைய தாலி சங்கிலியை கழற்றவேண்டும் என்று நிர்ப்பந்தித்ததால் தாலி கட்டிய கணவன் முன்பே தாலியை கழற்றிய சம்பவமும் நடந்தது. திருச்சியில் முழுக்கை சட்டை அணிந்து வந்த மாணவியை அனுமதிக்காததால், அவருடைய பெற்றோரே கத்தரியால் அந்த சட்டையின் முழுக்கையை வெட்டி அகற்றினார்கள்.

முஸ்லிம் மாணவிகளை அவர்கள் அணிந்திருந்த பர்தாவை கழற்ற சொன்னதும், மாணவர்கள் அணிந்திருந்த பூணூல், ருத்ராட்ச மாலையை கழற்ற சொன்னதும் கொடுமையிலும் கொடுமை. இவ்வளவு துன்புறுத்தல்கள் மத்தியில் காவலுக்கு இருந்த தமிழக போலீஸ்காரர்கள் அத்தனை இடங்களிலும் மனிதாபிமானத்தோடு நடந்துகொண்டனர். திருப்பூரில் ஒரு மாணவியின் சுடிதாரில் அதிக பட்டன்கள் இருந்தது என்பதற்காக உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. உடனே அங்கு காவலுக்கு இருந்த பெண் போலீஸ் ஏட்டு மணிமேகலை, அந்த மாணவியை தன் இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்று அருகில் உள்ள துணிக்கடையில் வேறு ஆடை வாங்கிக்கொடுத்து தேர்வு எழுத வைத்தார்.

சென்னையில் ஒரு மாணவர் அசல் ஆவணங்கள் இல்லாததால் அனுமதி மறுக்கப்பட்டார். உடனடியாக அங்கு பணியில் இருந்த வில்லிவாக்கம் உதவி கமிஷனர் சிதம்பர முருகேசன், பிரசாந்த்குமார் என்ற போலீஸ்காரரை இண்டர்நெட் மையத்துக்கு அனுப்பி அங்கு ஆவணங்களை பதிவிறக்கம் செய்துகொண்டுவர ஏற்பாடு செய்தார். அந்த மாணவரும் மகிழ்ச்சியுடன் தேர்வு எழுதினார். இதுபோல பல இடங்களில் போலீஸ்காரர்களின் உதவி மகத்தானதாக இருந்தது. சிவில் சர்வீஸ் தேர்வு உள்பட எந்த அரசு பணிகளுக்கான தேர்விலும் இவ்வளவு கெடுபிடி இல்லை. மேலும் இப்போதெல்லாம் சோதனைக்காக நவீன கருவிகள் இருக்கும்போது இத்தகைய தேவையற்ற கெடுபிடிகள் தேவையா?

## தனியார் பள்ளி வாகனத்தில் ஆட்சியர் ஆய்வு



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா பவளத்தான்பாளையம், ஏஈடி பள்ளி வளாகத்தில் தனியார் பள்ளி வாகனங்களுக்கான வருடாந்திர கூட்டாய்வு பணியினை தொடங்கி வைத்து, பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## ஸ்டார் அகாடமி மேசைப்பந்து விளையாட்டு பயிற்சி மையம் துவக்கம்



கடலூர் அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஸ்டார் அகாடமி மேசைப்பந்து விளையாட்டு பயிற்சி மையத்தினை துவக்கி வைத்து, மாணவர்களுக்கு சீருடைகள் மற்றும் மேசைப்பந்து உபகரணங்களை வழங்கினார்.

## ஆட்சியரிடம் களரி போட்டி வீரர்கள் வாழ்த்து



திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் பீகாரில் நடைபெறும் கேலோ இந்திய களரி போட்டிக்கு தேர்வு செய்யப்பட்ட தமிழக வீரர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றார்கள்.

## கதர் கிராம தொழில்களை மேம்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

### ஆளுநர் கைலாஷ்நாதன் பங்கேற்பு



புதுச்சேரி, மே 7-

புதுச்சேரி மாநிலத்தில் கைவினை மற்றும் கதர் கிராம தொழில்களை மேம்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் தலைமையில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது.

அன்மையில் துணைநிலை ஆளுநர் புதுதில்லியில் ஆணையத்தின் தலைவர் மனோஜ் குமத்தை சந்தித்து இது தொடர்பாக ஆலோசனை நடத்தினார். அதன் தொடர்ச்சியாக, நடைபெற்ற கூட்டத்தில் தொழில் வளர்ச்சித் துறை செயலர் ருத்ர கௌடு, மாவட்ட தொழில் மைய பொதுச் மேலாளர் கோவிந்தராஜன், செயல் மேலாளர் ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர். புது தில்லி, தேசிய கிராம தொழில் ஆணையத்தின் தலைவர் மற்றும் மும்பையில் இருந்து கிராம தொழில் ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஆகியோர் காணொளி வாயிலாக கூட்டத்தில் பங்கேற்றனர்.

கைவினை மற்றும் கிரமத் தொழில்களை மேம்படுத்த புதுச்சேரி மாநிலத்தில் ஒரு பயிற்சி மையம் உலக தரத்தில் விற்பனை அரங்கம் அமைப்பது. கூட்டத்தில், அதிக அளவில், கைவினைக் கலைஞர்கள் மற்றும் கிராமத் தொழில்களில் ஈடுபடுவோருக்கு பயிற்சி அளிப்பது. புதுச்சேரியில் கைவினையில் பத்ம ஸ்ரீ மற்றும் தேசிய விருது பெற்றவர்கள் மற்றும் சிறந்த கைவினைப் பொருள்களை உலக அளவில் புகழ்பெறச் செய்வது. நாடு முழுவதும் உள்ள 8000 கிராம தொழில் விற்பனை மையங்களிலும் புதுச்சேரி கைவினைப் பொருள்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்வது. உள்ளூர் கைவினை கலைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக முருங்கப் பாக்கம் கலை மற்றும் கைவினை கிராமத்தை மேம்படுத்துவது. இன்னும் ஓரிரு வாரங்களில் புதுச்சேரி வர இருக்கும் மும்பை குழு மூலமாக அதற்கான பூர்வாங்க ஆய்வுப் பணிகளை தொடங்குவது. என்று முடிவு செய்யப்பட்டது.

## பாதாள சாக்கடை திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம்



வேலூர் மாநகராட்சி, மண்டலம் 3ல் நடைபெற்று வரும் குடிநீர் பணிகள், சாலை பணிகள், கழிவுநீர் கால்வாய் பணிகள் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி தலைமையில் நடைபெற்றது.

## அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு பண்டிகை கால முன்பணம் உயர்வு: அரசாணை வெளியீடு

சென்னை, மே 7-

தமிழக சட்டசபையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த ஏப்ரல் 28ந்தேதி அவை விதி 110ன் கீழ், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்காக 9 புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். அதில் ஒன்றாக, பண்டிகை கால முன்பண உயர்வு பற்றிய அறிவிப்பை வெளியிட்டார்.

அதில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களின் குடும்பத்தினருடன் பண்டிகைகளை சிறப்பாக கொண்டாடும் வகையில், இதுவரை வழங்கப்பட்டு வரும் பண்டிகை கால முன்பணம் ரூ.10 ஆயிரம், இனி ரூ.20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்று கூறியிருந்தார். இந்த நிலையில், இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக அதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நிதித்துறை முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

உள்ளாட்சி அமைப்புகளின் கல்வி நிறுவனங்கள், அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள், அரசு ஊழியர்கள் என பண்டிகை கால முன்பணம் பெறும் தகுதியுடைய அனைவருக்கும், இந்த அரசாணை பொருந்தும். அதன்படி அவர்கள் ரூ.20 ஆயிரத்தை பண்டிகை கால முன்பணமாக பெறுக் கொள்ளலாம். அந்தப் பணத்தை பிடித்தம் செய்யும் முறையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.



## மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஆய்வு

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், பெருமருதூர் ஊராட்சியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மனுக்கள் குழுத் தலைவர், அரசு தலைமைக் கொறடா ராமசந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# திமுக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்



**திண்டுக்கல், மே 7-**

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பெரியசாமி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில், திண்டுக்கல் கிழக்கு – மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், திண்டுக்கல் கலைஞர் மாளிகையில் நடைபெற்றது.

இதில் திராவிட முன்னேற்றகழக மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நிர்வாகிகள், நகர நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# சீவல்சரகு கிராமத்தில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் கட்ட அடிக்கல் நாட்டு விழா



**திண்டுக்கல், மே 7-**

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி சீவல்சரகு கிராமத்தில் "முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம்" அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு பணியினை., கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பெரியசாமி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் சரவணன், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், விளையாட்டு துறை அதிகாரிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

# IPL 2025: Gujarat Titans go atop after surviving thriller in rain against Mumbai Indians



**New Delhi, May 7-**

When Jasprit Bumrah knocked over Shubman Gill's stumps with a sharp nip-backer and combined with Trent Boult to induce more strikes, it looked like the game was over. Particularly when rain intervened to leave GT, who needed 24 from 12 balls but were four runs short of the DLS target. But the elements relented and the game resumed. GT just about managed to get the 15 runs needed off the final over.

Rahul Tewatia smashed the first ball from Deepak Chahar to long-off to leave GT needing 11 from 5. He squeezed out a yorker and Gerald Coetzee sliced a six next ball. Now just 4 were needed from 3. Another single but it was a no-ball and Tewatia, whose calling card is exactly this situation, needed to get just 2 from 3. But he slogged to deep midwicket for just a single. 1 from 2 but Coetzee holed out.

Now 1 from 1, and Arshad Khan ran after hitting straight to Hardik Pandya at mid-off. The MI skipper went for a direct hit, though Suryakumar Yadav was almost at the stumps, and missed. Surya flailed his arms to suggest the throw should have come to him but the game was done and dusted. GT were at the top of the table.

The chase was under GT's control when Bumrah decided to intervene. GT needed 41 runs from 31 balls. Gill was in, and they had 8 wickets intact. But all evening, Bumrah had just one aim: either trap Gill LBW or bowl him with his old nemesis, the nip-backer that will expose Gill's iffy weight-transfer on to the front foot. He eventually did it as the ball threaded the bat-pad gap left by the leaden feet to crash into the stumps. Gill's age-old problem, that undoubtedly England's bowlers will test in the upcoming Test series, had caught up with him.

Gujarat now needed 41 from 30 balls. Doable, of course, but Boult stubbed out Sherfane Rutherford and Bumrah castled Shahrukh Khan almost immediately. And when Ashwini Kumar took out Rashid Khan, GT needed 30 from 15. Both Bumrah and Boult's overs were done.

It came down to 24 from the final two overs with Tewatia and Coetzee in, but the rain came down to turn it into a Super Over-like situation.

Around the halfway mark of the game, it had begun to rain around Mumbai, but it held up near the stadium with the swirling winds. The ball began to talk at the start of the chase and Mumbai threw Boult and Bumrah early in the piece, as they bowled five of the first eight overs.

Boult took out Sai Sudharsan, the most compact of the younger Indian batsmen in this tournament, with one that just about shaped away from the left-hander, inducing a nick behind. But Gill and Jos Buttler sussed out the situation, and played with caution. Though runs came slowly, they weathered the storm, literally and figuratively.

At the 10-over mark, GT were 68 for 1, one more than the DLS target. An error-filled eighth over, with 3 wides and 2 no-balls from Hardik Pandya that went for 18 runs where Buttler smashed a four and Gill crash-landed a free hit over longoff, helped.

So did the dropped catch by Tilak Verma at long-on to reprieve Gill, on 35, in the 12th over. But left-arm seamer Ashwini Kumar induced a nick from Buttler next ball from an attempted big off-drive. They now needed 78 from 51 balls.

It further plummeted down after Sherfane Rutherford smashed a six and a couple of fours against Will Jacks's off-breaks in the 13th over and also pulled Ashwini for a six.

Rain caused a stoppage in play with 49 needed in 36 balls. Mumbai threw Bumrah upon resumption and he knocked over Gill's stumps, but GT pulled off a last-ball thriller.

Mumbai perhaps would not even have made 150 and retained any hope in the chase after the admirable work of the GT spinners.

But Jacks was dropped by Sudharsan and Mohammad Siraj on 0 and 29, and Surya was dropped on 10 by Sai Kishore.

When Sai Kishore and Rashid Khan came on to bowl, Surya and Jacks were making GT pay for the dropped chances. Kishore hadn't bowled much of late, just eight overs in last six games, and Rashid had been often erring in length. But on Tuesday, Sai not only got the ball to turn a tad bit, but also slowed the pace expertly, hindering bat-flow.

It was classic white-ball spin bowling at its best and even Surya, with his inside-out drives and sweeps, couldn't quite crack the code. Jacks was never fluent against spin in his knock. There wasn't much pace to work with and with his ability to get the off-pace ball to dip, Sai Kishore proved a tough customer. He would also vary the angles of the bowling arm to create more variations.

Rashid hit a full length consistently, mixed his fizzing googlies with slower leg-breaks and Jacks, in particular, struggled. Previously in the tournament, Rashid had often been guilty of bowling short and even lacking the usual fizz. Not on Tuesday.

Brief Scores for Mumbai Indians vs Gujarat Titans: Gujarat Titans 147 for 7 (Shubman Gill 43, Jasprit Bumrah 2-19) beat Mumbai Indians 155 for 8 (Will Jacks 53, Sai Kishore 2-34) by three wickets (DLS method)

# ஜீவன் ஈமு கேர் இந்தியா (பி) லிட் நிதி நிறுவனத்திற்கு சொந்தமான நிலம் 29ம் தேதி ஏலம்

**திண்டுக்கல், மே 7-**

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் நகரில் செயல்பட்டு வந்த ஜீவன் ஈமு கேர் இந்தியா (பி) லிட் என்ற நிதி நிறுவனத்திற்கு சொந்தமான வேடசந்தூர் வட்டம். பாகாநத்தம் கிராமம் (புல எண் 1064/14 விஸ்தீரனம் 4.47 ஏக்கர் குறும மதிப்பு ரூ.8,96,950) புலங்களில் உள்ள நிலம், தமிழ்நாடு முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் 1997 இன் கீழ் தகுதி பெற்ற அலுவலர் மற்றும்



திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலுவலரால் 29.05.2025 அன்று முற்பகல் 11.00 மணியளவில் வேடசந்தூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் பொதுஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது.

இந்த சொத்துக்கள் மற்றும் ஏல நிபந்தனைகள் தொடர்பான விபரங்கள் திண்டுக்கல் மாவட்ட (www.dindigul.nic.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் பொது ஏலத்தில் எடுக்க விரும்புவோர். இதுதொடர்பான விபரங்களை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பழனி சார் ஆட்சியர் அலுவலகம், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கொடைக்கானல் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். இந்த விபரங்கள் அந்தந்த அலுவலக விளம்பர பலகையிலும் ஒட்டப்பட்டுள்ளது. ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலத்தில் விருப்பம் உள்ளவர்கள் கலந்துகொள்ளலாம். நிறுவனத்திற்கு சொந்தமான மேற்படி அசையா சொத்தினை நிலையில் உள்ள விதத்தில் உள்ளவாறே ஏலம் விடப்படும். என திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி தெரிவித்துள்ளார்.

# கல்வி அமைச்சர், அரசு செயலரின் வாக்குறுதியை ஏற்று ஆசிரியர் காத்திருப்பு போராட்டம் தற்காலிகமாக தள்ளிவைப்பு

**காரைக்கால், மே 7-**

புதுச்சேரி கல்வி அமைச்சர் மற்றும் அரசு செயலரின் வாக்குறுதியை ஏற்று அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் தொகுப்பூதிய ஆசிரியர் மற்றும் ஊழியர்களின், நேற்று முதல் காத்திருப்பு போராட்டத்தை தற்காலிகமாக தள்ளி வைத்துள்ளனர்.

புதுவை அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் கடந்த 8 நாட்களாக கல்வித்துறை மற்றும் காரைக்கால் முதன்மை கல்வி அதிகாரி வளாகத்தில் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், கடந்த 02.05.2025 அன்று, புதுச்சேரி கல்வி அமைச்சர் முன்னிலையில் நடைபெற்ற சந்திப்பில், கல்வித்துறை செயலரை அழைத்து பேச்சுவார்த்தை நடத்துவதாக கல்வி அமைச்சர் கூறியிருந்தார்.

அதன்படி, நேற்று முன்தினம் புதுச்சேரி கல்வி அமைச்சர் நமச்சிவாயம், கல்வித்துறை அரசு செயலர் பிரியதர்ஷினி, புதுவை மறை மாவட்ட கல்வி செயலர் பீட்டர் ராஜேந்திரன், பாத்திமா மேல்நிலைப்பள்ளி முதல்வர் அருள் மகிமை, தனியார் பள்ளி சம்மேளன கௌரவ தலைவர் வின்சென்ட் ராஜ் ஆகியோர் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்வது தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தையின் முடிவில் கல்வித்துறை அரசு செயலர் பிரியதர்ஷினி, பணியில் உள்ள ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை இரண்டு நாட்களுக்குள் தயாரித்து கல்வித்துறை அமைச்சரிடம் சமர்ப்பிப்பதாக உறுதி அளித்ததை தொடர்ந்து, ஒன்பதாவது நாள் போராட்டத்தை கைவிட்டு, காத்திருப்பு போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக சம்மேளன பொதுக்குழுவில் முடிவெடுக்கப்பட்டது.

# ஈரோட்டில் தொழில் துறை வர்த்தக கண்காட்சி நிறைவு

**ஈரோடு, மே 7-**




ஈரோட்டில் அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பு மூலம் 'பேட்டியா பேர்2 025' என்ற தலைப்பில் 4 நாட்கள் கோலாகலமாக நடந்த தொழில் துறை வர்த்தக கண்காட்சி நிறைவு பெற்றது.

ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் 'பேட்டியா பேர் 2025' என்ற தலைப்பில் அனைத்து தொழில் துறை வர்த்தக கண்காட்சி கடந்த 2ம் தேதி முதல் தொடங்கியது. கண்காட்சியினை தமிழக வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி, எம்எல்ஏ சந்திரகுமார், மேயர் நாகரத்தினம் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இதில், 210 அரங்குகளில் வேளாண் உபகரணங்கள், சூரியஒளியில்(சோலார்) இயங்க கூடிய ஏசி, மின் உபகரணங்கள், பேட்டரியில் இயங்கும் இருசக்கர வாகனங்கள், டிராக்டர்கள், கார், இரு சக்கர வாகனங்கள், பர்னிச்சர் மற்றும் பெண் தொழில் முனைவோர்கள் மூலம் பெண்களுக்கென்றே பிரத்யேகமாக ஜவுளி மற்றும் தங்கம், வெள்ளி நகைகள் கண்காட்சி மற்றும் விற்பனை நடந்தது. மத்திய, மாநில அரசுகளின் மூலம் மானியத்தில் அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது. கண்காட்சி 2வது நாளில் ஈரோடு கலெக்டர் ராஜகோபால் சுன்கரா நேரில் ஆய்வு செய்து, யோகா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். இதுதவிர வேலை வாய்ப்பு முகாமில், 500க்கும் மேற்பட்டோர் பதிவு செய்து, ஏராளமானோர் வேலை வாய்ப்பினை பெற்றனர். கண்காட்சி நடந்த நாட்களில் சின்னத்திரை புகழ்பெற்ற கலைஞர்கள் மூலம் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. சிறுவர் சிறுமிகளுக்கு நடனம், காரத்தே, குழு நடனம், சதுரங்கம், பாட்டு, சிலம்பம், சமையல், குழந்தைகளுக்கான பிற வேடிக்கை போட்டிகள் பிரிவு வாரியாக நடத்தப்பட்து.

இந்நிலையில், இந்த கண்காட்சியின் நிறைவு நாள் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு கூட்டமைப்பின் தலைவர் வி.கே. ராஜமாணிக்கம் தலைமை தாங்கினார். செயலாளர் ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக ஈரோடு டவுன் டிஎஸ்பி முத்துக்குமரன் பங்கேற்று, கண்காட்சியில் சிறந்து விளங்கிய ஸ்டால்களையும், சிறப்பாக பணியாற்றியவர்களையும் கவுரவித்து நினைவு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கினார். இதில், சிறந்த ஸ்டால்களாக தேர்வு செய்யப்பட்ட பாண்டியன் ஏஜென்சி, துபாய் நட்ஸ் நிறுவனம், சூப்பர் ஹோம்ஸ் நிறுவனத்திற்கும், மக்களின் கவனத்தை ஈர்த்ததாக டூல்ஸ். காம் நிறுவனத்திற்கும், புதிய சிந்தனை மற்றும் கண்டுபிடிப்பிற்காக ஜெய் ஜெய் எண்டர்பிரைசஸ், இசட் கார்டு நிறுவனத்திற்கும், முத்திரை பதித்த நிறுவனங்களாக கிரீன் இந்தியா மற்றும் டெண்ட்கொட்டா நிறுவனங்களுக்கும் பராட்டப்பட்டது. இதைத்தொடர்ந்து கண்காட்சி கலை அரங்கில் நடத்தப்பட்ட பல்வேறு வகையான போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பிடித்த சிறுவர், சிறுமிகளுக்கு பதக்கம், பரிசு கோப்பை, சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. மேலும், கண்காட்சி வெற்றிகரமாக நடக்க பணியாற்றிய சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், தன்னார்வலர்களும் கவுரவித்து நினைவு பரிசு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், முன்னதாக பேட்டியா பேர் கண்காட்சி தலைவர் ஜிப்ரி வரவேற்றார். முடிவில் கண்காட்சி செயலாளர் சின்னச்சாமி நன்றி கூறினார். கலை நிகழ்ச்சிகளை பேராசிரியர் முனைவர் ரமேஷ் ஒருங்கிணைத்தார். கூட்டமைப்பின் பொருளாளர் முருகானந்தம், கண்காட்சியின் பொருளாளர் சிவக்குமார், கண்காட்சி துணை தலைவர் செந்தில் குமார் மற்றும் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், அரங்குகள் அமைத்த தொழில் நிறுவனத்தின் நிர்வாகிகள், ஊழியர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# பங்கு சந்தை ஏற்ற இறக்கத்திற்கு ஏற்ப சிறப்பாக செயல்படும் எச்டிஎப்சி ப்ளெக்சி கேப் பண்ட்: ரூ.1 லட்சம் முதலீடு ரூ.1.84 கோடியாக உயர்வு

**கோவை, மே 7-**

பெரிய முதலீட்டு நிறுவனங்கள், நடுத்தர மற்றும் சிறு முதலீட்டு நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்யப் பட்ட எச்டிஎப்சி ப்ளெக்சி கேப் பண்ட் மாறுபட்ட சந்தை சுழற்சிகள் இருப்பினும் முதலீட்டாளர்களுக்கு சிறந்த வருவாயை வழங்கி உள்ளது. கடந்த 1995ம் ஆண்டு ஜனவரி 1ந்தேதி துவக்கப்பட்ட இந்த பண்ட், நீண்ட கால காத்திருப்பிற்கான செல்வத்தை உருவாக்கும் திறனை நிரூபித்துள்ளது, மேலும் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் 18.82 சதவீதத்தை (மார்ச் 31, 2025 நிலவரப்படி) வழங்கியுள் ளது. இந்த திட்டம் துவங்கிய போது செய்யப்பட் ரூ.1 லட்சம் முதலீடானது தற்போது சுமார் ரூ.1.84 கோடியாக வளர்ச்சி அடைந்துள்ளது. இது நிப்டி 500 டிஆர்ஐயை விட ரூ.1.51 கோடி அதிகமாகும். இதன் வளர்ச்சி விகிதம் தோராயமாக ரூ.20.24 கோடியாக வளர்ச்சி அடைந்துள்ளது. கடந்த 30 ஆண்டுகளில் இந்த பண்ட் பல சந்தை சுழற்சிகளை வெற்றிகரமாக கடந்து வந்துள்ளது, வலுவான அடிப்படைகள் மற்றும் நீண்டகால வளர்ச்சி திறன் கொண்ட தரமான நிறுவனங்களில் முதலீடு செய்ததன் காரணமாக அது சிறப்பான வளர்ச்சியை அடைந்துள்ளது. நியாயமான மதிப்பீடுகளில் தரமான நிறுவனங்களை மையமாகக் கொண்டு, பங்குத் தேர்வில் "கீழ் மேல் அணுகுமுறை" அடிப்படையில் இந்த திட்டத்தின் முதலீட்டு உத்தி உள்ளது. இதுகுறித்து எச்டிஎப்சி ஏஎம்சி நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி நவ்நீத் முனோத் கூறுகையில், கடந்த முப்பது ஆண்டுகளாக எச்டிஎப்சி ப்ளெக்சி கேப் பண்ட் பயணம், எங்கள் முறையான முதலீட்டு தத்துவத்திற்கும், முதலீட்டாளர் செல்வத்தை இந்த பண்ட் பல்வேறு சந்தை சுழற்சிகளைக் கடந்து, ஒவ்வொரு முறையும் சிறப்பான வளர்ச்சியை வெளிப்படுத்தி உள்ளது. இதன் காரணமாக முதலீட்டாளர்கள் சிறந்த பலனைப் பெற்றுள்ளனர் என்று தெரிவித்தார். இதுகுறித்து எச்டிஎப்சி ஏஎம்சி முதுநிலை நிதி மேலாளர் ரோஷி ஜெயின் கூறுகையில், இந்த பண்ட் மூலம் முதலீட்டாளர்கள் சிறந்த வருவாய் ஈட்ட உதவுவதில் நாங்கள் மிகுந்த பெருமை கொள்கிறோம். நிலையான வளர்ச்சியைக்கொண்ட உயர்தர வணிகங்களை அடையாளம் காண்பதில் நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்துவதால், எங்கள் முதலீட்டாளர்களுக்கு சிறந்த பலனை எங்களால் தர முடிந்தது. எச்டிஎப்சி ப்ளெக்சி கேப் பண்ட் திட்டத்தில், சீரான மற்றும் பன்முகப் படுத்தப்பட்ட அணுகுமுறை மூலம் சிறந்த ஆபத்து சரிசெய்யப்பட்ட வருமானத்தை வழங்குவதற்கான எங்கள் இலக்கில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம் என்று தெரிவித்தார்.

# டெங்கு ஒழிப்பு தின விழிப்புணர்வு




**திண்டுக்கல், மே 7-**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மதுரை மண்டலம், திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சி சார்பாக தேசிய டெங்கு ஒழிப்பு தின விழிப்புணர்வு தூய்மை நகரத்திற்கான மக்கள் இயக்கம் என் குப்பை எண் பொறுப்பு, அமைப்பு சார்பிலும் குப்பையை கண்ட இடத்தில் வீசக்கூடாது. துப்புரவு பணியாளர்களை கனிவுடன் நடந்து கொள்ளுங்கள். நமது சுற்றுவட்டார பகுதியை சுத்தம் செய்வது அவர்களின் கடமை ஆகும். ஆதலால் நம் அவர்களுக்கு உண்டான மரியாதையை தர வேண்டும் என்றும், பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் மஞ்சள் கைப் பையை கையில் எடுப்போம். என்று உறுதிமொழி ஏற்போம் ஒட்டன்சத்திரம் சத்யா நகர் தும்பிச்சம்பட்டியில் ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாளர் சுவேதா தலைமையில் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஒட்டன்சத்திரம் நகராட்சி துப்புரவு ஆய்வாளர் ராஜமோகன், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் வீரப்பன், காமராஜ், சக்திவேல் மற்றும் களப்பணி உதவியாளர்கள், துப்புரவு பணியாளர்கள் ஆகியோர் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

## மத்திய அரசு உத்தரவின்படி

# லாஸ்பேட்டையில் இன்று மாலை போர் ஒத்திகை



**புதுச்சேரி, மே 7-**

மத்திய அரசின் உத்தரவின்படி லாஸ்பேட்டையில் இன்று மாலை போர் ஒத்திகை நடக்கிறது.

பஹல்காம் தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து இந்தியா பாகிஸ்தான் இடையே எந்த நேரத்திலும் போர் ஏற்படும் சூழல் நிலவி வருகிறது. இந்நிலையில் இன்று போர் ஒத்திகை நடத்தும்படி அனைத்து மாநில அரசுகளுக்கும், மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

அதனையொட்டி, புதுச்சேரியில் போர் ஒத்திகை நடத்துவது தொடர்பாக நேற்று கலெக்டர் அலுவலகத்தில், கலெக்டர் குலோத்துங்கன் தலைமையில் அனைத்து துறை அதிகாரிகள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம் நடந்தது.

கூட்டத்தில், பேரிடர் மேலாண்மை துறை, போலீஸ் அதிகாரிகள், சுகாதாரத்துறை, பொதுப்பணித்துறை, தீயணைப்பு துறை, உள்ளாட்சி துறை, போக்குவரத்து துறை, மின்துறை, இந்திய விமானப்படை, தேசிய மாணவர் படை, தேசிய சேவை திட்டம், சுற்றுலாத்துறை, புதுச்சேரி விமான நிலைய அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் இன்று 7ம் தேதி மாலை 4 மணிக்கு லாஸ்பேட்டை விமான நிலையம் அருகில் போர் ஒத்திகை நடத்துவது. அப்போது, 'வான்வழி தாக்குதலின்' போது துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் செய்ய வேண்டியவை குறித்து ஒத்திகை நடைபெறுகிறது.

இது ஒத்திகை மட்டுமே என்பதால், மக்கள் யாரும் பீதியடைய வேண்டாம். இந்த ஒத்திகையை திறம்பட நடத்திட, தேவையான ஒத்துழைப்பை அளிக்க வேண்டும் என, மாவட்ட கலெக்டர் குலோத்துங்கன் கேட்டுக்கொண்டார்.

# பஹல்காம் தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டம்



**கோவை, மே 7-**

காஷ்மீர் மாநிலம் பஹல்காம் பகுதியில் இந்துக்களை குறி வைத்து பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய பயங்கரவாத தாக்குதலை கண்டித்தும் 26 பேர் பலியானதை கண்டித்து கோவை சுந்தராபுரம் பகுதியில் கோவை தெற்கு மாவட்டம் சார்பாக மாவட்ட தலைவர் சந்திரசேகர் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் 200க்கும் மேற்பட்ட பாஜக நிர்வாகிகள் கலந்துகொண்டு பாகிஸ்தானுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர். பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய பாஜக நிர்வாகி வசந்த ராஜன் காஷ்மீரில் பிரதமர் நரேந்திர மோடி 370 ஆர்டிகல் ரத்து செய்ததில் காஷ்மீரின் பொருளாதாரத்தை உயர்த்தி உள்ளார். மேலும் இந்தியா மற்றும் உலகம் முழுவதிலிருந்து கோடிக்கணக்கான மக்கள் சுற்றுலா காஷ்மீர் வந்து செல்வதனால் காஷ்மீரில் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்துள்ளதாக தெரிவித்தார்.

இதில் விவசாய அணி மாநிலத் துணைத் தலைவர் குமரேசன், ஊடகப்பிரிவு பிரேம், மாவட்ட பொதுச் செயலாளர் ரகுநாதன் மற்றும் பாஜக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# அரசு மாதிரிப் பள்ளியில் ஆட்சியர் ஆய்வு



தூத்துக்குடி மாவட்டம் வல்லநாடு இன்பெண்ட் ஜீசஸ் கல்லூரி வளாகக் கட்டிடத்தில் செயல்பட்டுவரும் மாவட்ட அரசு மாதிரிப் பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் தொலைநோக்கு பார்வையில் மேல்படிப்பினை பற்றி அறிந்துகொள்ள வேண்டும்: காரைக்கால் மாவட்ட சட்ட பணிகள் ஆணைய நீதிபதி அறிவுறுத்தல்

**காரைக்கால், மே 7-**

நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் தொலைநோக்கு பார்வையில் மேல் படிப்பினை பற்றி அறிந்து கொள்ள வேண்டும். காரைக்கால் மாவட்ட சட்ட பணிகள் ஆணைய நீதிபதி ராஜசேகரன் அறிவுறுத்தியுள்ளார்.

காரைக்காலை அடுத்த திரு.பட்டினம் அரசு ஆண்கள் தொழில் பயிற்சி நிறுவனத்தில், மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி, மாவட்ட பெற்றோர் ஆசிரியர் நல சங்கம் சார்பில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு ஐடிஐ முதல்வர் சுகுணா தலைமை தாங்கினார். மாவட்ட பெற்றோர்



ஆசிரியர் சங்க தலைவர் வின்சென்ட் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைய நீதிபதி ராஜசேகரன் பேசியதாவது: இது போன்ற தொழில்நுட்பங்களை வெளிப்படுத்தும் ஐடிஐ படிப்பது என்பது நீங்கள் கொடுத்து வைத்த பாக்கியம். எனக்கு அந்த வாய்ப்பு கிடைக்காததால், பல்வேறு திசைகள் மாறி பல்வேறு பட்டங்களை பெற்று, இன்றைக்கு ஒரு நீதிபதியாக வந்துள்ளேன். ஒரு கட்டத்தில் எனக்கென்று ஒரு குறிக்கோளை வைத்து கடைசிவரையில் முயற்சி செய்ததன் விளைவாக, இந்த பதவியில் நான் வந்திருக்கிறேன். அதுபோல் மாணவர்களும் தங்களது லட்சியங்களை அடைய, உடல் நலம், மனநலத்தை செம்மையாக பாதுகாக்க வேண்டும். எப்பொழுதும் மனதை உறுதியாக வைத்துக் கொள்ள வேண்டும். மகிழ்ச்சியாக படிப்பது, நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் தொலைநோக்கு பார்வையில் மேல் படிப்பினை பற்றி அறிந்து கொள்வது, தகவல் பரிமாற்றம் போன்ற அறிவு அறிவு சார்ந்த திறனை வளர்த்துக் கொள்ளுதல், அதிகாலையில் எழுந்து படித்தால், பயிற்சி செய்தல், விளையாடுதல் போன்றவற்றை குறிக்கோளாக வைத்துக் கொள்ள வேண்டும். என்றார்.

இறுதியாக மாணவர்கள் எழுப்பிய பல்வேறு சட்ட உதவிகள் தொடர்பான கேள்விகளுக்கு, நீதிபதி ராஜசேகரன் பதில் அளித்து, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். தொடர்ந்து ஐடிஐ வளாகத்தில் மரக்கன்றுகளை நீதிபதி நட்டார். இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர். முடிவில் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் துணைச் செயலாளர் நெல்சன் நன்றி கூறினார்.

# விழுப்புரம் பகுதியில் 25 நாட்களுக்கு மேலாக நெல் கொள்முதல் செய்யவில்லை

## விவசாயிகள் வேதனை



விழுப்புரம், மே 7-

விழுப்புரம் மாவட்டம் கானையை அடுத்த கல்பட்டு,பெரும்பாக்கத்தில் செயல்படும் அரசு நேரடி கொள்முதல் நிலையத்தில் 25 நாட்களுக்கு மேலாக நெல் கொள்முதல் செய்யாததாலும் திதீடீர் மழையினால் 2500க்கும் அதிகமான நெல் மூட்டைகள் மழையினால் நனைந்ததால் விவசாயிகள் நெல்லினை உலர்த்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

விழுப்புரம் அருகேயுள்ள கல்பட்டு, பெரும்பாக்கம், கானை உள்ளிட்ட இடங்களில் அரசு நேரடி கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த நெல் கொள்முதல் நிலையத்திற்கு விவசாய நிலத்தில் விளைவிக்கும் நெல்களை விற்பனைக்காக விவசாயிகள் கொண்டு வருகின்றனர். அப்படி கொண்டு வரப்பட்ட நெல்களை கடந்த 25 நாட்களுக்கு மேலாக விவசாயிகளின் நெல்லினை கொள்முதல் செய்யாததாலும், குத்தகை நிலம் எடுத்து நெல் பயிரிட்டவர்களிடம் சிட்டா அடங்கல் கொடுத்தும் நெல்களை கொள்முதல் செய்யாததால் விவசாயிகள் பாதிக்கபபட்டுள்ளனர். நெல் கொள்முதல் செய்யாததால் நேற்றைய தினம் பெய்த கனமழையினால் நெல் களத்தில் தார்பாய் போட்டு மூடப்பட்ட நெல் மூட்டைகள், மூட்டை பிடிக்காத நெல் மழையில் நனைந்து சேதமடைந்துள்ளன. இதனால் நெல்களை உலர்த்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். அதிகாரிகள் விவசாயிகளின் நெல்களை வாங்காமல் வியாபாரிகளின் நெல்களை வாங்குவதாக குற்றம்சாட்டியுள்ளனர்.

# கலசலிங்கம் நர்சிங் கல்லூரியில், இதயம், நுரையீரல் இயக்க முதலுதவி பயிற்சி



சங்கரன்கோவில், மே 7-

ஸ்ரீவில்லிபுத்தூர் கிருஷ்ணன்கோவில், கலசலிங்கம் நர்சிங் கல்லூரியில், இதயம், நுரையீரல் இயக்க முதலுதவி பயிற்சி கல்லூரி முதல்வர் வி.கலா முன்னிலையில் நடைபெற்றது. கலசலிங்கம் பல்கலை துணை வேந்தர் முனைவர் எஸ்.நாராயணன், பதிவாளர் முனைவர் வி.வாசுதேவன் வாழ்த்துரை வழங்கினர். பரமக்குடி, முதலுதவி மாஸ்டர் பயிற்சியாளர், எஸ்.அலெக்ஸ், இதயம்நுரையீரல் இயக்கம் தடைபடுதல், மின்சாரம் தாக்குதல், உட்பட்டவர்களை டி.ஆர்.ஏ.பி.சி.என்ற வரிசையில், முதலுதவி சம இடைவெளியில், ஒரு சுற்று 20 தடவை, 5 சுற்று, கைகளால் அழுத்தம் செய்து அபாயக் கட்டத்தை தாண்டும் பயிற்சிகளை செய்ய மாணவர்களும் செய்து பயிற்சி பெற்றனர்.

மேலும் நீரில் மூழ்கியவர்கட்கு, விஷக் கடி, பாம்புக்கடி, பலத்த காயம் ஏற்பட்டவர்களை, தூக்கி முதலுதவி செய்யும் முறைகளை பயிற்சியுடன் விவரித்தார். மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். பேரரசிரியைகள் ஜி.தங்க சுப்புலட்சுமி, கே.நாகமுத்து, பயிற்சிக் கருத்தரங்கை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். ஜெனிபர் பிரசில்லா வரவேற்புரையும், ராமலட்சுமி நன்றியுரையும் வழங்கினர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# காரைக்காலில் கால்நடை கண்காட்சி



காரைக்கால், மே 7-

காரைக்காலில் மாவட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத்துறை சார்பில், கால்நடை மற்றும் கோழிகள் எழில் கண்காட்சி நேற்று சிறப்பாக நடைபெற்றது.

காரைக்கால் தலத் தெருப்பகுதியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, புதுச்சேரி குடிமை பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திருமுருகன் தலைமை தாங்கினார். காரைக்கால் மாவட்ட கலெக்டர் சோம சேகர் அப்பாராவ் முன்னிலை வகித்தார். இக்கண்காட்சியில் பசுமாடுகள், எருதுகள், கிடாரிகள், வண்டி மாடுகள், எருமை மாடுகள், கறவை மாடுகள், பந்தயத்திற்கு மட்டுமே விடப்படும் மாடுகள் மற்றும் சேவல்கள், வான்கோழிகள் உள்ளிட்ட கால்நடைகள் மற்றும் கோழிகள் இடம்பெற்றன. கண்காட்சியை பார்வையிட்ட அமைச்சர் திருமுருகன் பேசியதாவது: கண்காட்சியில் இடம்பெற்ற மாடுகள் அனைத்தும் பார்த்தவரையில் மாடு வளர்ப்பவர்கள் தங்களது பிள்ளைகளைப் போலவே வளர்த்துள்ளனர். ஏனென்றால் கால்நடைகளை பார்க்கும் பொழுதே மிகவும் ஆரோக்கியமாக உள்ளது. நமது மாநிலத்தில் பால்வளம் மற்றும் கால்நடைகளை பெருக்குவதற்கு புதுச்சேரி அரசு தேடித்தேடி விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு கால்நடைகளை வழங்கிக் கொண்டு வருகிறது. இதனை பொதுமக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். தொடர்ந்து சிறந்த கால்நடைகளுக்கான பரிசுகளை அதன் உரிமையாளர்களிடம் அமைச்சர் மற்றும் மாவட்ட கலெக்டர் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் காரைக்கால் கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத்துறை இணை இயக்குனர் டாக்டர் கோபிநாத், கால்நடை உதவி மருத்துவர் சுமதி, அமைச்சரின் தனி செயலர் பாஸ்கரன், துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

# ஐந்தொழிலாளர்கள் ஆலோசனை கூட்டம்



கோவை, மே 7-

தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு கோவை பெரியநாயக்கன்பாளையம் அங்காளம்மன் கோவில் வளாகத்தில் தமிழ்நாடு பாண்டிச்சேரி விஸ்வகர்மா சமூக மக்கள் கூட்டமைப்பு, ஸ்ரீ விஸ்வகர்மா அங்காளம்மன் சமூக நல அறக்கட்டளை, ஸ்ரீ விஸ்வகர்மா காயத்ரி ஆலயம் இணைந்து ஐந்தொழிலாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. ஆலோசனை கூட்டத்தில் தேசிய பொது செயலாளர் நிலவேம்பு சித்தர் ஸ்ரீலஸ்ரீ சில சண்முகசுந்தர பாபு ஜி சுவாமிகள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு அமைப்பு கொடியேற்றி ஆலோசனை கூட்டத்தை துவக்கி வைத்தார். ஆலோசனை கூட்டத்திற்கு மாநில செயலாளர் ரிக் ரவி, வடக்கு மாவட்ட தலைவர் மணி, கோவை மாவட்ட தலைவர் சிவமணி, மாவட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தலைமை வகித்தனர். இதுகுறித்து ஸ்ரீலஸ்ரீ பாபு ஜி சுவாமிகள் தெரிவிக்கையில், விஸ்வகர்மா சமுதாய மக்கள் ஐந்தொழிலாளர்கள் தொழில் மற்றும் மொழிகளை கடந்து ஒன்றிணையவேண்டுமென்றும் அரசியலில் அங்கீகாரம் கிடைக்கவேண்டும் என்பதற்காக கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன்பாக இந்த அமைப்பு துவங்கப்பட்டது. ஆலோசனை கூட்டத்தில் ஐந்து தொழிலாளர்களுக்கு ஐந்தொழில் நலவாரியம் அமைக்க தமிழக அரசை வற்புறுத்துதல், அரசு வேலையில் 3.5 இட ஒதுக்கீடு, கூட்டுறவு வங்கியில் விஸ்வகர்மா சமுதாய மக்களுக்கு மட்டும் தங்க நகை பரிசோதகர் அரசுவேலை, விஸ்வகர்மா சமுதாயப் பெண்கள் பெயரில் இலவச வீட்டு மனை பட்டா உள்ளிட்ட ஒன்பது முக்கிய அம்ச தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக விஸ்வகர்மா ஜெகத் குரு ஸ்ரீலா ஸ்ரீ பாபுஜி சுவாமிகள் தெரிவித்தார். இந்நிகழ்வில் முருகேஷ் மாநில துணைத்தலைவர் சேலம் நாமக்கல் மண்டல பொருப்பாளர், கமலஹாசன் மாநில துணைத்தலைவர் ஏழுமலை, மாநில அமைப்பு செயலாளர் திண்டிவனம், முத்துக்குமார், மாநில அமைப்பு செயலாளர் தேனி மாவட்டச் செயலாளர் கோவை, நாச்சிமுத்து மாநில அமைப்பு செயலாளர், கோவை, ஸ்ரீ பிரகாஷ், மாநில இளைஞரணி செயலாளர் சேலம், பாண்டி கிழக்கு மாவட்ட செயலாளர் கோவை, கோவை விஸ்வநாதன், மாநகர செயலாளர் சண்முகநாதன், மதுரை மாவட்ட செயலாளர், ஐஎஸ்ஓ மணி, மாவட்ட பொறுப்பாளர் சீனிவாசன், தங்க நகை பிரிவு மாவட்ட செயலாளர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த ஆலோசனை கூட்டத்தில் முருகேசன், செயற்குழு உறுப்பினர் கோவை அங்காளம்மன் கோயில் பொருளாளர் செல்வராஜ் மற்றும் நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கோவையில் சப்கான் கண்காட்சி 15ம் தேதி துவங்குகிறது



கோவை, மே 7-

சிறு குறு மற்றும் நவீன தொழில்நுட்பம் சார்ந்த துறைகளின் அனைத்து தரப்பினரும் பங்கேற்கும் சப்கான் 2025 கண்காட்சி கோவை கொடிசியா வளாகத்தில் மே மாதம் 14 ந்தேதி துவங்கி 3 நாட்கள் நடைபெற உள்ளது. இதற்கான செய்தியாளர்கள் சந்திப்பு கொடிசியா அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கொடிசியா தலைவர் கிருஷ்ணராஜ், சப்கான் 2025 கண்காட்சியின் தலைவர் சஞ்சீவிகுமார் ஆகியோர் பேசினர். அதில், கொடிசியாவில் சப்கான் கண்காட்சி 9வது பதிப்பாக மே 14 தேதி துவங்கி, 16ம் தேதி வரை, நடைபெற உள்ளது. கண்காட்சியை பிரிக்கால் நிறுவனத்தின் தலைவர் வனிதா மோகன் துவக்கி வைக்க இருப்பதாகவும், இந்த கண்காட்சியில் கோவை உட்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பதிவு செய்த மற்றும் பதிவு செய்திடாத சிறு குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் தங்களது உற்பத்தி மற்றும் தொழிலை பொருளாதார வளர்ச்சியில், மேம்படுத்த இக்கண்காட்சி பெரிதும் உதவ உள்ளது. இந்த கண்காட்சியில் 15 பொதுத்துறை நிறுவனங்கள், 10 பெரும் தனியார் தொழிற்சாலைகள், ஒரு வங்கி, உள்ளிட்ட 225 நிறுவனங்கள் பங்கேற்க உள்ளதாக தெரிவித்தனர்.

# காரைக்கால் தங்க மாரியம்மன் கோவிலில் தீமிதி திருவிழா



காரைக்கால், மே 7-

காரைக்காலில் தலத்தெருவில் உள்ள தங்க மாரியம்மன் கோவில் தீமிதித்திருவிழா நேற்று மாலை சிறப்பாக நடைபெற்றது.

காரைக்கால் தலத் தெருவில் சிவகாமி அம்மாள் சமேத சிவலோகநாத சுவாமி தேவஸ்தானம் உள்ளது. இந்த தேவஸ்தானத்திற்கு சொந்தமான தங்கமாரியம்மன் கோவில் தீமிதித்திருவிழா ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான திருவிழா கடந்த ஏப்ரல் 27ந் தேதி இரவு கொடியேற்றத்துடன் தொடங்கியது. தொடர்ந்து, பிடாரி அம்மன், முள்ளி அம்மனுக்கு காப்பு கட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவைத்தொடர்ந்து, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாகனத்தில் அம்மன் வீதியுலா செல்லும் நிகழ்ச்சி நடைபெற்று வந்தது. 4ந் தேதி பகல் கஞ்சி வார்த்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. நேற்று காலை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகமும், மாலை அன்னவாகனத்தில் அம்மன் தீக்குழிக்கு எழுந்தருளும் நிகழ்ச்சியும், தொடர்ந்து தீமிதித்திருவிழாவும் நடைபெற்றது. விழாவில், திரளான பக்தர்கள் தங்கள் வேண்டுதல் நிறைவேற தீமிதித்தனர். விழாவில், புதுச்சேரி குடிமைப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திருமுருகன் மற்றும் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். இரவு சந்தன காப்பு அலங்காரத்தில் அம்மன் பக்தர்களுக் காட்சி தந்தார். நேற்ற அம்மன் மஞ்சள் நீர் விளையாட்டுடன் வீதியுலா நடைபெறும். மே 7ந் தேதி அம்மன் பொன்னூஞ்சல் ஆடல் வழிபாட்டுடன் விழா நிறைவடைகிறது.

# காரைக்கால் ஸ்ரீகயிலாசநாதர் கோயில் திருப்பணிக்கு ஐயங்கார் பேக்கரி ரூ.2 லட்சம் நிதி



காரைக்கால் ஸ்ரீ கயிலாசாநாதர் ஆலய மகா கும்பாபிஷேக திருப்பணிக்காக காரைக்கால் ஐயங்கார் பேக்கரி உரிமையாளர் ஏ.முத்தையா ரூ.2 லட்சம் தொகையினை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம், தலைமையில், கோவில் நிர்வாக அதிகாரி காளிதாசன், திருப்பணி கமிட்டி நிர்வாகி கண்தாஸ் சிவலிங்க ராஜா முன்னிலையில் வழங்கினார்.

# மதுரா கோட்ஸ் நிறுவன ஆலையின் செயல்பாடுகளை அமைச்சர் ஆய்வு



மதுரை, மே 7-

மதுரை மாவட்டம் மதுரா கோட்ஸ் நிறுவன ஆலையின் செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி நேரில் ஆய்வு செய்தார்.

மதுரையில் செயல்பட்டு வரும் மதுரா கோட்ஸ் நிறுவன ஆலையின் செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு அரசு கைத்தறி தொழில் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, கைத்தறி நெசவாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடும் நோக்கில் கூட்டுறவு அமைப்பின் கீழ் நெசவாளர்கள் மற்றும் துணிநூல் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து அரசுத் திட்டங்களின் மூலம் அவர்தம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திடும் வகையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை செயல்பட்டு வருகிறது. விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மற்றும் மானியத்துடன் மின்சாரம் வழங்கும் திட்டம், கைத்தறி ஆதரவுத் திட்டம், நெசவாளர்களுக்கான முதியோர் ஓய்வூதியத் திட்டம், காப்பீட்டுத் திட்டம், கைத்தறித் துணிகளை சந்தைப்படுத்துவதற்கான நிதியுதவித் திட்டம், ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா திட்டம் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து 2 நாள் சுற்றுப் பயணம் செய்து ஆய்வு மேற்கொண்டார். அதன்படி முதல் நாளில் தேனி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் நூற்பாலையில் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து இரண்டாம் நாளில் இராமநாதபுரம் மாவட்டம், அபிராமம் அருகேயுள்ள அச்சங்குளம் கூட்டுறவு நூர்பாலையில் நேரடி ஆய்வு மேற்கொண்டார். அதன் பின்பு, மாலையில் மதுரையில் செயல்பட்டு வரும் தனியார் நூற்பாலை நிறுவனமான மதுரா கோட்ஸ் நிறுவன ஆலையில் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, நூர்பாலையின் செயல்பாடுகள், தொழில்நுட்பங்கள், மகளிருக்கான தொழில் வாய்ப்புகள் என பல்வேறு தரவுகள் குறித்து மதுரா கோட்ஸ் நிறுவன பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

இந்த ஆய்வின்போது, துணிநூல் துறை இயக்குநர் இரா.லலிதா, கூடுதல் இயக்குநர் மகாலிங்கம், மண்டல துணை இயக்குநர் (மதுரை) க.திருவாசகர், மதுரா கோட்ஸ் நிறுவனத்தின் முக்கியப் பிரதிநிதிகள் உட்பட பலர் உடனிருந்தனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
மாலை எக்ஸ்பிரஸ்
• புதன் • மே 7, 2025

# பஜன்கோ வேளாண் கல்லூரி சிறந்த நெல் ஆராய்ச்சி நிலையமாக தேர்வு

## முதலமைச்சர், அமைச்சரிடம் வாழ்த்து



புதுச்சேரி, மே 7-

காரைக்கால் ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அகில இந்தியாவில் சிறந்த நெல் ஆராய்ச்சி நிலையம் உட்பட 7 விருதுகளை தட்டிச் சென்றது.

இந்த ஆண்டிற்கான தேசிய அளவில் நெல் ஆராய்ச்சி விஞ்ஞானிகளின் ஆய்வுக்கூட்டம் ஹைதராபாத்தில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தில் கடந்த மூன்று நாட்களாக நடந்தது.

இந்த வைர விழா கூட்டத்தில் இந்தியாவிலிருந்து 100க்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டனர். இதில், நெல் ஆராய்ச்சி குறித்து பல்வேறு தொழில்நுட்பக் கருத்துக்கள் ஆராயப்பட்டது. ஆய்வுகள் மேற்கொண்ட விதம், எண்ணிக்கை, துல்லிய தன்மை போன்ற பல்வேறு கூறுகளைக் கொண்டு ஆண்டுதோறும் இந்திய நெல் ஆராய்ச்சி நிறுவனத்தால் 14 விருதுகள் வழங்கப்படும். இந்த ஆண்டு காரைக்கால் வேளாண் கல்லூரி சிறந்த ஆராய்ச்சி நிலையத்திற்கான விருது உட்பட ஏழு விருதுகளை தட்டிச் சென்றது.

சிறந்த ஆராய்ச்சி நிறுவனத்திற்கான விருதினை துணை தலைமை இயக்குனர் (பயிர் அறிவியல்) யாதவ், இந்திய நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் சுந்தரம் ஆகியோரிடம் இருந்து கல்லூரி முதல் புஷ்பராஜ் பெற்றுக்கொண்டார்.

வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கு கல்லூரியின் பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் துறை பேராசிரியர் திருமேனி தேர்வு செய்யப்பட்டார்.

விருதுகளை கல்லூரி முதல்வர் புஷ்பராஜ் மற்றும் பேராசிரியர்கள் புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி வேளாண் அமைச்சர் தேனீ. ஜெயக்குமார் ஆகியோரை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

# மதுரை மாநகராட்சியில் புதிதாக கட்டப்பட்ட கழிப்பறைகளை திறந்து வைத்த அமைச்சர்



மதுரை, மே 7-

மதுரை மாநகராட்சி சமூக பொறுப்பு நிதியின் கீழ் புதிதாக கட்டப்பட்ட கழிப்பறைகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் திறந்து வைத்தார்.

மதுரை மாநகராட்சி கிழக்கு சித்திரை வீதி பகுதியில் உள்ள மீனாட்சி பூங்கா அருகில் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியின் சமூக பொறுப்பு நிதியின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள கழிப்பறைகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மேயர் இந்திராணி பொன்வசந்த் மாவட்ட ஆட்சித் தலைவர் மா. சௌ. சங்கீதா, ஆணையாளர் சித்ரா விஜயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மதுரை மாநகராட்சியில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக நமக்குத் நாமே திட்டம், தனியார் வங்கிகளின் சமூக பொறுப்பு நிதி திட்டத்தின் கீழ் பள்ளிக்கூடங்கள் மேம்படுத்துதல், பூங்காக்கள் அமைத்தல், பொது சுகாதார மையம் அமைத்தல், பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்துதல், மரக்கன்றுகள் நடுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் தனியார் பங்களிப்புகள் பெறப்பட்டு மாநகராட்சியின் சார்பில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மதுரை மாநகராட்சி அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோவில் கிழக்கு சித்திரை வீதியில் பகுதியில் உள்ள மீனாட்சி பூங்கா அருகில் தமிழ்நாடு மெர்க்கண்டல் வங்கியின் சமூக பொறுப்பு நிதியின் கீழ் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கழிப்பறைகளை அமைச்சர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வில் துணை மேயர் நாகராஜன், மண்டலத் தலைவர் பாண்டிச்செல்வி, நகர்நல அலுவலர் இந்திரா, உதவி ஆணையாளர் பிரபாகரன், உதவி செயற்பொறியாளர் முத்து, மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், மாமன்ற உறுப்பினர் பாஸ்கரன், தமிழ்நாடு மெர்க்கண்டல் வங்கி அலுவலர்கள் உட்பட மாநகராட்சி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# உலக திருக்குறள் சாதனை மாநாடு



புதுச்சேரி, மே 7-

புதுவைத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற மூன்றாவது உலக திருக்குறள் சாதனை மாநாட்டில் திருக்குறள் தேசிய நூலினை புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து வெளியிட பேராசிரியர் முனைவர் உரு.அசோகன் பெற்றுக் கொண்டார். உடன் புதுவை ஞானபிரகாசம், திருச்சி இளஞ்செழியன், புதுகை மா.தனலட்சுமி, வடலூர் இரா.செந்தில்குமார், ஞான பீட விருதாளர் ம. சக்கரவர்த்தி, தஞ்சை தமிழ்தாசன், வேலூர் கலைவாணி, காரைக்கால் இரா. கனகவள்ளி, உளுந்தூர்பேட்டை ஏகலைவன், தேனி இளங்குமரன் மற்றும் பலர் உள்ளனர்.

# வில்லியனூர் சுப்ரமணியர் கோவிலுக்கு நிதியுதவி வழங்கல்



புதுச்சேரி, மே 7-

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பரசுராமபுரம் பகுதியில் அமைந்துள்ள வள்ளி தேவசேனா சமேத சுப்ரமணியர் ஆலய திருப்பணிக்கு திமுக பொதுக்குழு உறுப்பினர் எஸ்.கோபால் தமது சொந்த பணத்தில் இருந்து ரூ. ஒரு லட்சமும், வில்லியனூர் மூர்த்தி நகர் ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு ரூ.10 ஆயிரமும் கோவில் நிர்வாகிகளிடம் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா முன்னிலையில் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் வில்லியனூர் தொகுதி திமுக செயலாளர் மணிகண்டன், தொழிலதிபர் சரவணன் மற்றும் கோவில் நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# ராதா ஆங்கில பள்ளியில் பட்டமளிப்பு விழா



புதுச்சேரி, மே 7-

புதுச்சேரி அரியாங்குப்பம் மணவெளியில் உள்ள ராதா ஆங்கில மேல்நிலைப்பள்ளியில் நேற்று பட்டம் அளிப்பு விழா மிகச் சிறப்பாக பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராக புதுச்சேரி தனியார் பள்ளி கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் ரங்கநாதன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். பள்ளி தாளாளர் பரமானந்தம் மற்றும் பள்ளி முதல்வர் பெர்லின் ஜெயக்குமார் ஆகியோர் மழலை செல்வங்களுக்கு பட்டங்கள் அளித்து சிறப்பு செய்தனர். விழாவை பள்ளி ஆசிரியை மாலா மாணவச் செல்வங்களில் சிறப்புகளை வர்ணனை செய்தார். விழாவை பள்ளி ஆசிரியை மலர்கொடி, வனிதா, உமா ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். இறுதியாக பள்ளி ஆசிரியை ஸ்ரீ கங்கா அனைவருக்கும் நன்றியுரை கூறினார்கள். ஆசிரியர்களும், பெற்றோர்களும் கலந்துகொண்டு மாணவர் செல்வங்களுக்கு உற்சாகம் அளித்து சிறப்பு செய்தனர்.

# புதுவை பல்கலைக்கழகம், ஆயுஷ் இயக்ககம் மற்றும் மருந்துகளின் கட்டுப்பாட்டு துறையுடன் ஒப்பந்தம்




புதுச்சேரி, மே 7-

மருந்தியல், ஆயுஷ் மற்றும் வேதியியல் துறைகளில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்தும் நோக்கத்தில் புதிய ஒத்துழைப்பு ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் பாரம்பரிய மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் கல்வி மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கத்தில், புதுவைப் பல்கலைக்கழகம் மற்றும் ஆயுஷ் இயக்ககம், மருந்துகளின் கட்டுப்பாட்டு துறை, புதுச்சேரி அரசு ஆகியவை ஒப்பந்தம் ஒன்றை கையெழுத்திட்டன.

இந்தகூட்டாண்மையின் கீழ், புதுவைப் பல்கலைக்கழகத்தின் வேதியியல் துறை வேதியியல் துறை முக்கியப் பங்காற்றும் இந்த ஒப்பந்தம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது, மூவகை அமைப்புகளின் முக்கிய அதிகாரிகள், பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது. புதுவைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பிரகாஷ் பாபு தலைமை தாங்கி பேசுகையில், “இந்த ஒப்பந்தம் கல்விசார் நுண்ணறிவும், அரசின் ஒழுங்குமுறை அனுபவமும் இணைந்துள்ள ஒரு முக்கிய முயற்சியாகும் ஆயுர்வேதம், யோகா மற்றும் நேச்சுரோபதி, யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகிய ஆயுஷ் மருத்துவத் துறைகளில் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபடக்கூடிய வாய்ப்புகளை இது உருவாக்கும்“ என்று கூறினார்.

ஆயுஷ் இயக்கத்தின் இயக்குநர் மற்றும் மாநில மூலிகைத் தாவரங்கள் வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான பாக்டர் ஸ்ரீதரன் பேசுகையில், “இந்த ஒப்பந்தம் ஆய்வக அறிவையும் நடைமுறை பயன்பாடுகளையும் இணைக்கும் பாலமாக செயல்படும். நமது பரிசோதனை வசதிகள் மற்றும் ஒழுங்குமுறை அனுபவங்களை பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சி வளங்களுடன் இணைத்து, செயல்திறன் வாய்ந்த சுகாதார தீர்வுகளை விரைவாக உருவாக்க முடியும்“ என்று கூறினார்.

மருந்துகளின் கட்டுப்பாட்டு துறையின் கட்டுப்பாட்டு மற்றும் உரிமம் வழங்கும் அதிகாரியான டாக்டர் ஆனந்தகிருஷ்ணன் ‘இந்த ஒப்பந்தம் ஆயுஷ் துறையில் புதுமை மற்றும் வளர்ச்சிக்கான முக்கிய கட்டமாகும். தரமான, பாதுகாப்பான மற்றும் செயல்திறன் வாய்ந்த மருந்துகளின் கிடைப்பை உறுதி செய்வதில் இது துணையாக அமையும்‘ என்று கூறினார். சர்வதேச தொடர்புகள் துறையின் பேராசிரியர் விக்டர் ஆனந்த்குமார் கூறுகையில், ‘கல்வித்துறை, தொழில்துறை மற்றும் அரசாங்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த மூன்று வழி முயற்சி, மருந்து மற்றும் சுகாதாரப் பராமரிப்புத் துறைகளில் கூட்டு ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கொள்கை தாக்கத்திற்கான புதிய வழிகளைத் திறக்கிறது’ என்றார்.

வேதியியல் துறையின் தலைவர் மற்றும் ஒப்பந்த ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சி.சிவசங்கர் கூறுகையில் ‘ஒரு வருடத்துக்கும் மேலான திட்டமிடல் மற்றும் கலந்துரையாடலின் விளைவாக இந்த ஒப்பந்தம் உருவாகியுள்ளது. இது அரசுப் பிரிவுகளுடனான தொடர்ச்சியான கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பிற்கான நிலையான மேடையை ஏற்படுத்துகிறது’ என்றார்.

இவ்விழாவின் முடிவில் வேதியியல் பேராசிரியர் பாலா மணிமாறன் நன்றியுரையை நிகழ்த்தி ‘இந்த ஒத்துழைப்பின் மூலம் பல்கலைக்கழகத்தின் கல்விசார் சூழலும் ஆராய்ச்சி திறனும் மேம்படும்‘ என்று நம்பிக்கையை தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தம் கல்வி மற்றும் தொழில்துறை, ஒழுங்குமுறை அமைப்புகளுக்கு இடையிலான இணைப்பை வலுப்படுத்தும் ஒரு முக்கிய முன்னேற்றமாக கருதப்படுகிறது. இது இந்தியா மற்றும் உலகளவில் சுகாதாரத்துறைக்கு நீண்டகால பலன்களை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கல்



முத்தியால்பேட்டை தொகுதி மஞ்சினி நகர் இளைஞர்களுக்கு திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர் பிரபாகரன் கிரிக்கெட் மட்டை மற்றும் கிரிக்கெட் உபகரணங்களை வழங்கினார்.

# விழுப்புரத்தில் ஸ்டார் அகாடமி நீச்சல் விளையாட்டு பயிற்சி மையம் திறப்பு



விழுப்புரம், மே 7-

விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள நீச்சல் பயிற்சி மையத்தினை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சென்னை ஒலிம்பிக் அகாடமியிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்துமாவட்டங்களிலும் காணொலி காட்சி வாயிலாக அகாடமி நீச்சல் விளையாட்டு பயிற்சி மையத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, விழுப்புரம் பெருந்திட்ட வளாகத்தில் உள்ள நீச்சல் பயிற்சி மையத்தில் அமைக்கப்பட்டுள்ள எஸ்டார் அகாடமி நீச்சல் விளையாட்டு பயிற்சி மையத்தினை திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் பொன்முடி, செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் மஸ்தான் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் திறந்து வைத்தனர்.

திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாட்டில் பிற துறைகளைக்கு நிகராக விளையாட்டுத்துறையும் முதன்மைத் துறையாக விளங்கிட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் பல்வேறு சிறப்புத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். இதுமட்டுமல்லாமல், உலகளவிலான விளையாட்டு போட்டிகள் செஸ் ஒலிம்பியாட், கார் பந்தயம் போன்ற பல்வேறு போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டதன் காரணமாக, சிறந்த விளையாட்டு, வீரர்கள், வீராங்கனைகளை உருவாக்கி வருகிறார்கள்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விளையாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் தமிழ்நாட்டில் பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. இதில், மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் பல்வேறு விளையாட்டு போட்டிகளில் வீரர், வீராங்கனைகள் கலந்துகொண்டு வெற்றி பெற்று வருகின்றனர். மேலும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சி பகுதிகளுக்கும் விளையாட்டுத்துறையில் இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தின்கீழ், அனைத்து ஊராட்சிகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டதன் காரணமாக பல்வேறு விளையாட்டுப்போட்டிகளுக்கு பயிற்சி பெற்று வருகிறார்கள்.

இதன் தொடர் நிகழ்வாக, தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், மானிய கோரிக்கையின்போது, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களில் பிரபலமான வீரர்கள், வீராங்கனைகள் பல்வேறு உயரிய நிலையிலான விளையாட்டுப் போட்டிகளில் மகத்தான வெற்றிகளைப் பதிவு செய்ய இயலும் என்பதை கருத்தில் கொண்டு, தகுதியான பயிற்றுநர்களை மாவட்டந்தோறும் குறிப்பிட்ட விளையாட்டுக்களில் நியமனம் செய்து வீரர்கள், வீராங்களைகளுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் உயரிய தரத்திலான விளையாட்டு திறன் மேம்பாடு மற்றும் அங்கீகார மையம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அதனடிப்படையில், இன்றைய தினம், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சென்னை ஒலிம்பிக் அகாடமியிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்துமாவட்டங்களிலும் காணொலி காட்சி வாயிலாக ஸ்டார் அகாடமி நீச்சல் விளையாட்டு பயிற்சி மையத்தினை தொடங்கி வைத்தார்கள்.

அந்த வகையில், விழுப்புரம் மாவட்டத்தில், விழுப்புரம் பெருத்திட்ட வளாகத்தில் உள்ள நீச்சல் பயிற்சி மையத்தில், ஸ்டார் அகாடமி நீச்சல் விளையாட்டு பயிற்சி மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஸ்டார் அகாடமி நீச்சல் மையத்தில் 20 விளையாட்டு வீரர்கள், 20 விளையாட்டு வீராங்கனைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஒரு மாதத்தில் 25 நாட்கள் தினசரி காலை, மாலை பயிற்சி வழங்கி உயரிய தரத்திலான சிற்றுண்டியும் வழங்கப்படவுள்ளது. இதுமட்டுமல்லாமல், இன்றைய தினம், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு சீருடைகள், விளையாட்டு காலணிகள் (ஷிதீஷீநீ) மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த பயிற்சி மையத்திற்கு ஏற்கனவே நீச்சல் பயிற்றுநராக உள்ள பயிற்றுரை இந்த பயிற்சி மைய பயிற்றுநராக மாற்றிக்கொள்ளும்படி தலைமை அலுவலகம் மூலம் அறிவுரை வழங்கப்பட்டு அதற்கு இணங்க ஏற்கனவே உள்ள நீச்சல் பயிற்றுநர் ஸ்டார் நீச்சல் மையத்தின் பயிற்றுநராக நேரடியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

எனவே, விளையாட்டு வீரர், வீராங்கனைகள் நல்வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டு நீச்சல் பயிற்சியினை பெற்று மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொண்டு, வெற்றி பெற்று நமது மாவட்டத்திற்கும், மாநிலத்திற்கும் பெருமை சேர்த்திட வேண்டும் என தெரிவித்தார்.

செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் விளையாட்டுத்துறையினை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு துணை முதலமைச்சரை விளையாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றதை தொடர்ந்து உலகளவிலான போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டு வருகிறது. இதனால் தமிழ்நாட்டினைச் சேர்ந்த விளையாட்டு, வீரர், வீராங்கனைகள் பல்வேறு போட்டிகளில் ஆர்வமாக பங்குபெற்று, வெற்றி பெற்று சாதனை படைத்து வருகிறார்கள். எனவே, அனைத்து மாணவ, மாணவியர்கள் பள்ளி படிப்பினை நன்றாக படித்து திறன்களை வளர்த்துக்கொள்வதோடு, அதற்கு நிகராக விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்துகொண்டு உடல் ஆரோக்கியத்தினை பாதுகாத்துக்கொள்வதோடு, ஏதேனும் ஒரு விளையாட்டினை தேர்வு செய்து நன்கு பயிற்சி பெற்று, மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்று தமிழ்நாட்டிற்கும், நம் மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் அனைத்து வீரர், வீராங்கனைகள் விளையாட்டுத்துறையில் சிறப்பாக செயல்பட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஜெயச்சந்திரன், விழுப்புரம் நகர்மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, நகர்மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் விஸ்வநாதன், மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அலுவலர் ஆழிவாசன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டையில் இலவச சைக்கிள் வழங்கும் விழா



புதுக்கோட்டை, மே 7-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் தாலுகா மீமிசல் பகுதியில் செயல்பட்டு வரும் சுடர் பெண்கள் கூட்டமைப்பில் இணைந்து செயல்படும் விதவைப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் மிகவும் ஏழைப் பெண்களின் ஒற்றைப் பெற்றோர் பெண் குழந்தைகள் பொருளாதார மேம்பாடு அடைய இத்தாலியன் இன்டர் லைன் மூலம் வழங்கிய சைக்கிள் திட்டத்தை றிவிஷிஷி புதுக்கோட்டை பலநோக்கு சமூக சேவை சங்கம் பெற்று தரும் நிகழ்வுகள் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பயன்பெற்ற 12 குழந்தைகள், பெற்றோர்கள், சுய உதவி குழு பெண்கள் அனைவரும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் பல நோக்கு சமூக சேவை சங்கத்தின் இயக்குனர் தந்தை அருட் திருபியாகப்ப ராஜா ரத்தினம் தந்தை யாகப்பா, ராஜரத்தினம், முதன்மை ஒருங்கிணைப்பாளர் ஜோதிராஜ், திட்ட மேலாளர் கருணாகரன், ஆலத்தூர் அரசு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் செல்லத்துரை கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். றிவிஷிஷி பகுதிநேர பணியாளர் விசாலி மேரி மற்றும் கூட்டமைப்பு பொருளாளர் எஸ் சுசிலா ரம்ஜான் பிவி சிரியா பேகம் ஜீவஜோதி ஆகியோர் நன்றியுரை ஆற்றினார்கள்,

# திருவெண்ணெய்நல்லூரில் வாக்காளர் பட்டியல் வெளியீடு



திருவெண்ணெய்நல்லூர், மே 7-

திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியம் காலியாக உள்ள 14வது வார்டு ஒன்றியக்குழு உறுப்பினர் பதவிக்கு விரைவில் இடைத்தேர்தல் நடைபெற உள்ளதால் வாக்காளர் பட்டியலை வட்டார வளர்ச்சி அலுவலர் கோபாலகிருஷ்ணன் வெளியிட்டார்.

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள சரவணம்பாக்கம் கோவுலாபுரம் கொத்தனூர் உள்ளடங்கிய 14வாடு ஒன்றிய குழு கவுன்சிலராக முருகன் உள்ளாட்சித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டார். கடந்த ஓராண்டுக்கு முன்பு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இந்த இடம் காலியானதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது. தேர்தல் நடத்துவதற்கான பணிகளைத் தேர்தல் ஆணையம் செய்து வருவதால் சரவணம்பாக்கம் ஊராட்சி வாக்காளர் பட்டியல் சரி பார்க்கப்பட்டு இன்று வட்டார வளர்ச்சி அலுவலர் பாலசுப்பரமணியன் வெளியிட்டார். இதனை ஒன்றிய குழு பெருந்தலைவர் ஓம்சிவசக்திவேல், மாவட்ட கவுன்சிலர் சந்திரசேகரன் இதனைப் பெற்றுக்கொண்டனர்.

# பூரணாங்குப்பம் ஸ்ரீ அய்யனார் கோவில் திருப்பணிக்கு ரூ. 15 லட்சம் நிதி



## சபாநாயகர் செல்வம் வழங்கினார்

புதுச்சேரி, மே 7-

மணவெளி சட்டமன்றத் தொகுதி பூரணாங்குப்பம் கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஐயனார் மற்றும் ஸ்ரீ பிடாரி அம்மன் கோவில் திருப்பணிக்காக புதுச்சேரி அரசு இந்து சமய அறநிலைத்துறை மூலம் ரூ.15 லட்சத்திற்கான காசோலையை சட்டப்பேரவை தலைவர் செல்வம், கோவில் திருப்பணி குழுவினரிடம் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியின்போது கோயில் நிர்வாக அதிகாரி பாஸ்கரன் மற்றும் கோவில் திருப்பணி குழுவினர், ஊர் பஞ்சாயத்தார் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உடன் இருந்தனர்.

# விழுப்புரம் மத்திய மாவட்ட செயற்குழு கூட்டம்



விழுப்புரம், மே 7-

விழுப்புரம் கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில், விழுப்புரம் மத்திய மாவட்ட திமுக சார்பில் நடைபெற்ற அவசர செயற்குழு கூட்டத்தில் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் லட்சுமணன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். மத்திய மாவட்ட செயலாளர் பேசியது தமிழ்நாட்டின் மாநில உரிமைகளை பாதுகாத்திட அவற்றை மீட்டிட தொடர்ந்து போராடி வருகின்றார்முதல்வர் முக ஸ்டாலின் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் கல்வியில் புரட்சியை ஏற்ப்படுத்தி வருகின்றார். முதல்வர் முக ஸ்டாலின கேட்கும் இடத்திலிருந்து வந்த மாற்றுத்திறனாளிகளை கொடுக்கும் இடத்திற்கு உயர்த்திருக்கிறார் முதல்வர் முக ஸ்டாலின் ஒன்றிய அரசு ஆளுநர் மூலம் தொடர்ந்து பல்வேறு இடர்பாடுகள் கொடுத்தாலும் அவற்றினை சட்டப் போராட்டமும் மீட்டெடுத்து இந்தியாவிற்கு வழிகாட்டியாக திகழ்கிறார். முதல்வர் முக ஸ்டாலின் இந்தி திணிப்பு, நீட் தேர்வு, 100 நாள் வேலை திட்டம் நிதி ஒதுக்கீடு, இவற்றிற்கு தொடர்ந்து போராடி வருகிறார். முதல்வர் முக ஸ்டாலின், இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது பன்முகம் கொண்ட தலைவராக முதல்வர் மு.க. ஸ்டாலின் திகழ்கின்றார்.

அனைவரும் ஒன்று சேர்ந்து உறுதியாக உழைத்து தமிழகத்தில் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் மீண்டும் முதல்வராக முதல்வர் முக ஸ்டாலின் அமர வைத்து அழகு பார்ப்போம் என பேசினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர் இளந்திரையன், நகர கழக செயலாளர் சக்கரை மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச ஸ்கூட்டி அமைச்சர் நமச்சிவாயம் வழங்கல்



புதுச்சேரி, மே 7-

புதுச்சேரி, மண்ணாடிப்பட்டு தொகுதி மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச ஸ்கூட்டியை அமைச்சர் நமச்சிவாயம் வழங்கினார்.

புதுச்சேரி அரசு சமூகநலத்துறை சார்பில், மண்ணாடிப்பட்டு தொகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் 6 பேருக்கு, இலவச இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டி வழங்கும் விழா திருக்கனூரில் நேற்று நடந்தது.

விழாவில் அமைச்சர் நமச்சிவாயம் தலைமை தாங்கி, மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு இலவச ஸ்கூட்டி மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் பாஜக பிரமுகர் முத்தழகன், வர்த்தக அணி மாநில தலைவர் கலியபெருமாள், தமிழ்மணி, கொம்யூன் ஆணையர் எழில்ராஜன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இதனைத் தொடர்ந்து, வில்லியனூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் சார்பில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் 100 நாள் திட்ட பணிகளை காட்டேரிக்குப்பத்தில் அமைச்சர் நமச்சிவாயம் துவக்கி வைத்தார்.

புதுச்சேரி அரசு




# நலம் சேர்க்கும் நல்லாட்சி !
# நான்கு ஆண்டே அத்தாட்சி !!

- பெண் குழந்தைகளுக்கு அதிகாரமளிக்கும் முதலமைச்சரின் அரவணைப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை, சுமார் 4,395 பெண் குழந்தைகளின் பெயரில் தலா ரூ.50,000/- வீதம் வைப்புத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.22 கோடி செலவிடப் பட்டுள்ளது.
- அரசிடமிருந்து மாதாந்திர நிதியுதவி எதுவும் பெறாத வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பத்தலைவிக்கு மாதம் ரூ.1,000/- வழங்கும் திட்டத்தின்கீழ் தற்போது வரை 56,720 குடும்பத்தலைவிகளுக்கு ரூ.5.67 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- முதலமைச்சரின் சமையல் எரிவாயு மானியத் திட்டத்தின்கீழ் சிவப்பு நிற குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு சிலிண்டர் ஒன்றிற்கு மானியம் ரூ.300/- மற்றும் மஞ்சள் நிற குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு ரூ.150/- மானியம் என ஆண்டிற்கு 12 சிலிண்டர்களுக்கான மானியம், 1,90,021 குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு சுமார் ரூ.4.75 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- முதலமைச்சரின் விபத்துக்காப்பீட்டு உதவி திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள அனைத்து குடும்ப உறுப்பினர்களின் பிரிமியத் தொகையை புதுச்சேரி அரசே செலுத்துகிறது. இதன் மூலம் சுமார் 5 இலட்சம் பயனாளிகள் பயன்.
- பெண்கள் பெயரில் சொத்துகள் வாங்கினால் முத்திரைத்தாள் கட்டணத்தில் 50 விழுக்காடு சலுகை வழங்கும் திட்டத்தின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் சுமார் 47,442 பெண்கள் பயன் பெற்றுள்ளனர்
- முதியோர், விதவைப் பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்களுக்கான பல்வேறு முன்னுரிமைத் திட்டங்களின்கீழ் 1,81,616 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர். இதற்காக அரசு ரூ.43.31 கோடி செலவிட்டுள்ளது.
- ஃபெஞ்சல் புயல் நிவாரணமாக புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பிராந்தியங்களைச் சேர்ந்த அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா ரூ.5,000 வீதம் மொத்தம் ரூ.177.22 கோடி உரிய நேரத்தில் வழங்கப்பட்டதும், விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.30,000 உடனடி நிவாரணம் வழங்கியதும் பெரும் பாராட்டுகளைப் பெற்றுள்ளது.
- புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பிராந்தியத்தைச் சேர்ந்த 8,678 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்கள் பாதிக்கப்பட்ட 12,955 விவசாயிகளுக்கு ரூ.24.11 கோடி வழங்கப்பட்டது.
- நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.1,868லிருந்து 2024-25ஆம் ஆண்டில் ரூ.2,300ஆக உயர்வு.
- கால்நடை இழப்பிற்கு உடனடி நிவாரணமாக ரூ.207.18 கோடி வழங்கப்பட்டது.
- தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விவசாயிகள் பெற்ற விவசாயக் கடன், வட்டி மற்றும் அபராத வட்டி மொத்தம் ரூ.11.61 கோடி முழுவதும் தள்ளுபடி. இதன்மூலம் 1,579 சிறு, குறு விவசாயிகள் பயன்.
- கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களின் 7,424 உறுப்பினர்களுக்கு நேரடி பணப்பயன் பரிமாற்ற முறையில் கால்நடைத் தீவன மானியமாக ரூ.7.23 கோடி வழங்கப்பட்டுள்ளது. கைத்தறி கூட்டுறவு அமைப்புகளை மேம்படுத்த ரூ.2.54 கோடி கொடுக்கப்பட்டுள்ளது
- புதுச்சேரி பொலிவுறு நகரத் திட்டத்தின்கீழ் சுமார் ரூ.29.50 கோடி செலவில் கட்டப்பட்ட பொலிவுறு பேருந்து முனையம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தது மக்களின் பாராட்டை பெற்றுள்ளது.
- மூர்த்திக்குப்பம் - புதுக்குப்பத்தில் ரூ.93.22 லட்சம் செலவில் துணை மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு முன்மாதிரி ஆய்வுகளை மேற்கொள்ள சென்னை IIT-யுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- நரம்பை மீனவர் கிராமத்தைக் கால நிலை தாங்கும் கரையோர மீனவ கிராமமாக அமைக்கும் பணி தொடக்கம்.
- மீனவர்களின் பாதுகாப்பிற்காக 3023 பதிவு பெற்ற விசைப்படகுகளில் ரூ.4.63 கோடி செலவில் இலவச டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்தப்பட்டுள்ளது.
- மீனவ சமுதாய மாணவர்களின் கல்விக் கட்டணத்தை அரசே செலுத்தும் திட்டம் விரைவில் அறிமுகம்.
- விசைப்படகு உரிமையாளர்களுக்கும் 60% மானியத்தில் வலை மற்றும் கயிறு வழங்கல்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் துறையில் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களில் பயன்பெற தற்போதுள்ள வருமான வரம்பு ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.8 இலட்சமாக உயர்த்தப்பட்டது.
- 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை ரூ.1,500லிருந்து ரூ.5,000 ஆகவும், 9ஆம் வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை ரூ.2,500 லிருந்து ரூ.8,000 ஆகவும் உயர்வு.
- டாக்டர். பி.ஆர்.அம்பேத்கர் அவர்கள் தொடர்புடைய இந்தியாவில் உள்ள நான்கு தலங்களுக்கு யாத்திரை மேற்கொள்ள நிதியுதவி வழங்கும் "அம்பேத்கர் யாத்ரா" என்னும் புதிய திட்டம் தொடக்கம்.
- ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ-மாணவியருக்கு வழங்கப்படும் தக்கவைப்பு கல்வி உதவித்தொகை (Retension Scholarship) ரூ.1,000 லிருந்து ரூ.5,000ஆக உயர்வு.
- கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு மற்றும் தனியார் துறைகளில் 21,792 இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- அரசுப் பள்ளிகளில் பயின்று நீட் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு மருத்துவம் / பல் மருத்துவம் / ஆயுர்வேத மருத்துவப் படிப்புகளில் 10 விழுக்காடு இட ஒதுக்கீடு.
- டிஜிட்டல் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கியதில் கடந்த நான்காண்டுகளில் சுமார் 22,466 மாணவ, மாணவியர் பயன் பெற்றுள்ளனர்.
- முதலமைச்சர் அறிவித்தபடி, அனைத்து நியாய விலைக் கடைகளும் திறக்கப்பட்டு இலவச அரிசி, அனைத்து சிவப்பு நிற குடும்ப அட்டைதாரர்களுக்கும் 20 கிலோ மற்றும் அனைத்து மஞ்சள் நிற குடும்ப அட்டைதராரர்களுக்கும் 10 கிலோ மீண்டும் வழங்கல்.
- மாற்றுத் திறனாளிகளின் மாதாந்திர உதவித்தொகையை இரண்டு முறை உயர்த்தி ஒவ்வொரு பிரிவினருக்கும் ரூ.1,500/- கூடுதலாக வழங்கல். சுமார் 21,329 மாற்றுத் திறனாளிகள் பயன். இதற்காக ஆண்டிற்கு சுமார் ரூ.78 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- பெருந்தலைவர் காமராஜர் வீடுகட்டும் திட்டத்தை, பாரதப் பிரதமரின் வீடுகட்டும் திட்டத்துடன் இணைத்து, மாநில அரசின் பங்காக வழங்கப்பட்ட ரூ.50,000/-ஐ ரூ.2 இலட்சமாக உயர்த்தி, மத்திய அரசின் பங்கான ரூ.1.50 இலட்சத்துடன் சேர்த்து மொத்தம் ரூ.3.50 இலட்சமாக வழங்கப்படுகிறது. இதன்மூலம் 2,465 குடும்பங்கள் பயன்.
- புதுச்சேரியில் உள்ள பள்ளிவாசல்களைச் சீரமைக்க புதுச்சேரி மாநில வக்ஃபு வாரியம் மூலம் ரூ.41.36 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மாநில வக்ஃபு வாரியம் மூலம் 2,695 இசுலாமிய மாணவ, மாணவியருக்கு ரூ.69.03 இலட்சம் கல்வி உதவித்தொகை மற்றும் ஊக்கத்தொகை வழங்கப் பட்டுள்ளது.
- பத்திரிகையாளர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியம் ரூ.10,000/-லிருந்து ரூ.15,000/- ஆக உயர்வு.

## சாதனைகளின் தொடர்ச்சி! சாத்தியமாகும் வளர்ச்சி!!

No.2526/DIP/AD(Press)/2025-2026

வெளியீடு: செய்தி மற்றும் விளம்பரத்துறை, புதுச்சேரி

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007

# பயங்கரவாத முகாம்கள் மீது இந்திய ராணுவம் தாக்குதல்



## அண்ணா, கருணாநிதி நினைவிடங்களில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை

## அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு பண்டிகை கால முன்பணம் உயர்வு


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 7-5-2025 புதன்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்